விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 25 ஞாயிற்றுக்கிழமை (10.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 256

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# முகமாலை முன்னரங்கப் பகுதியில்

# நேற்று அதிகாலை முதல் மோதல்!

## 11 இராணுவத்தினர் பலி; 53 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

முகமாலை முன்னரங்கப் பகுதியில் இராணுவத் தினருக்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் நேற்று அதிகாலை முதல் கடும் மோதல் இடம் பெற்றுள்ளது.

இம் மோதலில் இராணுவத்தரப்பில் ஒரு அதிகாரி உட்பட 11 பேர் பலியானதாகவும் 53 பேர் படுகாயம டைந்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். இதேவேளை இத் தாக்கு தல் நேற்று வரையும் தொடர்ந்ததாக தெரிய வருகிறது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தியில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன் தினம் இரவு இனந்தெரியாதோரால் இவர் சுடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சுடப்பட்டவர் நல்லூர் கோயில் வீதியைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளரான சதாசிவம் சத்தியசீலன் (வயது 37) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை பிரேதப்பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச–5)

## தீவக மக்களுக்கு உணவுத்தட்டுப்பாடு!

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் உணவுப் பொருட்களின் கையிருப்பு முற்றாக தீரும் நிலையில் உள்ளது. இது குறித்து அப் பகுதி பிரதேச செயலாளர்களும் கூட்டுறவுச் சங்க (04 ஆம்பக்கம்பார்க்க)



யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று அதிகாலை திருகோணமலை நோக்கி 795 பயணிகளுடன் புறப்பட்டுச் சென்ற கடற்படையின் 'சக்தி' கப்பல் நேற்று மாலை திருகோணமலையை சென்றடைந்தது. இக்கப்பலில் கடற்படையினரும் பயணித்ததாக தெரிவிக்கப்பட்டது. பயணிகளுடன் புறப்படத்தயாரான கப்பலை படத்தில் காணலாம்

## வாதரவத்தையிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

(புத்தூர்)

புத்தூர் வாதரவத்தையில் சூட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.கைகள் நைலோன் கயிற்றால் கட்டப்பட்ட நிலையில்; கண்களை சேட்டால் மூடிக்கட்டி குறித்த இளைஞனின் சடலம் போடப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட (04 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் மீட்கப்பட்ட சடலம் இனங்காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி செல்வநாயகபுரத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்ட சடலம்;

கடந்த 5 ஆம் திகதி காணாமல் போன அச்சுவேலி தோப்பு என்னும் இடத்தைச் சேர்ந்த யோகராசா கஜன் (வயது 23) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

காணாமல் போன தினத்தன்று, காலை சந்தைக்குச் சென்ற (04 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புவாசி நேற்று யாழில் சுட்டுக்கொலை

(யாழ்பாணம்)

யாழ்.மனித உரிமை அலுவலகத்திற்கு முன்பாக கொழும்பைச் சேர்ந்த குடும்பஸ்தர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் அளுத் மாவத்தை கொழும்பு 15 சேர்ந்த நடராஜா ஜெகதீஸ்வரன் (வயது 37) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி கொழும்பிலிருந்து புங்குடுதீவில் உள்ள (04 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறையில் இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் அவருடன் சென்ற மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர் சுதுமலை சாவற்காட்டைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான இராஜேந்திரம் இராஜமயில் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவருடன் கூடவே (04 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் சவாலை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவே உள்ளது

## பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல பதில்



(கொழும்பு)

தற்போதைய போர் நடவடிக்கை மூலம் கைப்பற்றிய இடங்களிலிருந்து வெளியேறுவது என்ற கேள்விக்கே இடமில்லை என்றும் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் சவாலை எதிர் கொள்ளத்தயார் என்று பாதுகாப்பமைச்சின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட இடங்களிலிருந்து வெளி யேறாவிட்டால் யுத்தமொன்றுக்குள் தள்ளப்படுவோம் என விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கான விநியோகப் பாதையான திருமலைக் கடற்படைத்தளத்தை தாக்கும் வல்லமையை சம்பூர் பிரதேசத்தில் புலிகள் பெற்றிருந்ததாலேயே தாங்கள் அப் பகுதியைக் கைப்பற்றியதாகவும் எனவே அப்பிரதேசத்திலிருந்து பின்வாங்குவது என்ற கேள்விக்கு எள்ளளவும் இடமில்லை என்றும் பாதுகாப்பமைச்சின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார். (ச–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கள்ளச் சந்தையில் பெற்றோல் விற்பனை!

## விலை மட்டும் அதிகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வீதிக் கடைகளில் தாராளமாகப் பெற்றோல் கிடைக்கின்றது. எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெற்றோல், மண்ணெண்ணெய் கையிருப்பில் இல்லை என்ற அட்டை தொங்கவிடப்பட்டுள்ளது.

எனினும் வீதிக்கரையோரக் கடைகளில் 350 ரூபா முதல் 400 ரூபா வரைக்கும் தாராளமாகப் பெற்றோல் கிடைக்கின்றது.

பெற்றோல் விற்பனை நிலையங்களில் மோட்டார் வாகனங்களுக்கு பெற்றோல் வழங்கப்படும் நேரங்களில் வரிசையில் நின்று பெற்றோல் நிரப்பும் மோட்டார் வாகன உரிமையாளர்கள் சிலர் உடனடியாக அப்பெற்றோலை ரியூப் மூலம் உறுஞ்சி கடைகளுக்கு கூடிய விலையில் விற்கின்றனர்.

மறுபடியும் வரிசையில் நின்று இணைந்து கொள்வதை அனேகமான எரிபொருள் விற்பனை நிலையங்களில் காணக்கூடியதாக இருந்தது.இவ்வாறு பெறப்பட்ட பெற்றோல் தற்போது கூடிய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (து-133)

# தனியார் பஸ் புறக்கணிப்பு ஒருவார காலம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தனியார் பஸ் உரிமையாளர்கள் மேற்கொள்ளத் தீர்மானித்திருந்த பணிப்புறக்கணிப்பு ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கட்டண அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டு நாளைமுதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தனியார் பஸ் உரிமையாளர்கள் தீர்மானித்திருந்தார்கள்.

இந்நிலையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வேண்டாம் என ஜனாதிபதி கோரியதையடுத்து ஒரு வார காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமது பணிப்புறக்கணிப்பு ஒத்திவைக்கப்பட்டால் எரிபொருள் விலைக் குறைப்போ அல்லது கட்டண அதிகரிப்போ வழங்க வேண்டும் என தாம் வலியுறுத்தியுள்ளதாகவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதற்குச் சாதகமான பதில் கிடைக்காவிடில் எதிர்வரும் 17 ஆம் திகதியிலிருந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

# மருந்து, எரிபொருள் முற்றாக தீர்ந்த நிலையில் கிளி.மருத்துவமனை செயலிழக்கும் அபாயம்

## பணிப்பாளர் சதானந்தன் கவலை

மருந்து, எரிபொருள் என்பன முற்றாகத் தீர்ந்த நிலையில் கிளிநொச்சி பொதுமருத்துவமனை செயலிழக்கும் நிலையை எட்டிவிட்டதாக மாவட்ட வைத்திய அதிகாரி சதானந்தன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நாளாந்த சிகிச்சைகளுக்காக தேவையான மருந்துகள் முற்றாக முடிபடைந்த நிலையில் நேற்றுடன் வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவு உட்பட அனைத் பிரிவுகளும்இயங்குவதற்குத் தேவையான டீசலும்முடிபடைந்ததாகஅவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு இவற்றைக் கிளிநொச்சிக்கு எடுத்துவர விதித்திருக்கும் தடையினால் ஏற்பட்டிருக்கும் இந்த அவல நிலையை முடிபுக்குக் கொண்டு வர உடன் உதவுமாறு சகல பொதுஅமைப்புகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அவர் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரிடம் மருத்துவமனையின் இக்கட்டான நிலைமைபற்றி எடுத்துரைத்ததாக தெரிவித்த மாவட்ட வைத்திய அதிகாரி சதானந்தன் இதுவரையும் மருத்துவமனை தொடர்ந்து இயங்குவதற்கு அவசியமான மருந்து, டீசல் என்பன கிடைக்கப்பெறவில்லை எனக் கவலை தெரிவித்தார்.

தென்னிலங்கையைத் தளமாகக் கொண்ட ஊடகங்கள் வன்னிக்குத் தேவையான மருந்துகள் அனுப்பப்பட்டுவிட்டதாகக் குறிப்பிடும் போதிலும் அவை இன்னும் வந்து சேரவில்லை என்று குறிப்பிட்டார்.

மருத்துவமனையை இயக்குவதற்கு நாளாந்தம் 210 லீற்றர் டீசல் தேவைப்படுவதாகவும் கடந்த 11 ஆம் திகதிக்குப் பின்னர் அவை அனுப்பப்படாததால் இயன்றவரை அதன் பாவனையைக் குறைத்து 160 லீற்றருக்கு மட்டுப்படுத்தி பயன்படுத்தியதாகத் தெரிவித்த சதானந்தன், அதனால் நேற்று வரையே வைத்தியசாலையை இயங்க முடிந்திருப்பதாகவும் கூறினார்.

இன்றுமுதல் அவசர அறுவைச் சிகிச்சைகள் எதனையும் செய்ய முடியாத நிலை இதனால் உருவாகியிருப்பதாக அச்சம் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் கடைசி காலாண்டுக்கு தேவையான மருந்து வகைகள் எவையும் வந்து சேராததால் மிகச் சாதாரண நோய்களுக்குக் கூட சிகிச்சையளிக்க முடியாத இக்கட்டான நிலையில் இருப்பதாகக் குறிப் பிட்ட அவர் தென்னிலங்கை போன்று தனியார் மருந்துக் கடைகளிலும் மருந்துகளை வாங்க முடியாதிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

திடீர் காயங்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான மருந்து வகைகள் மட்டுமன்றி, வலிப்பு, நீரிழிவு, இரத்தஅழுத்தம் போன்ற நோய்களுக்கான மருந்து வகைகள் கூட முடிபடைந்திருப்பதாகவும் இப்போது ஆரம்பித்திருக்கும் மழை காலத்தில் சாதாரணமாக ஏற்படக் கூடிய நோய்களுக்குக் கூட சிகிச்சை வழங்க முடியாத நிலையில் தாம் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். (ச)

# சுவரொட்டியிலிருந்த குண்டு வெடித்தது

(யாழ்ப்பாணம்)

கரவெட்டியில் சுவரொட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கரவெட்டி பிரதம தபாலகத்திற்கு முன்பாக ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியை இளைஞன் ஒருவர் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது இக் குண்டு வெடித்துள்ளது.

எனினும் அவ்விளைஞனுக்கு தெய்வாதீனமாகக் காயம் எதுவும் ஏற்படவில்லை. (ச-10)

# மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவைகள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகள் நேற்று ஒருசில இடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

டீசல் பற்றாக்குறை காரணமாக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# காணாமல் போனோர் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணைகள் தொடந்தும் இடம்பெற்று வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசாரணைகளை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள தடைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாக மனித உரிமை ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் நிமால் புஞ்சிகேவ தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் 425 பேர் காணாமல் போயிருந்ததாகவும் இவர்களில் 229 பேர் விசாரணைகளின்போது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் உறுதி கூறியுள்ளார்.

காணாமல் போனவர்களில் சிலர் அச்சம் காரணமாக வேறு இடங்களுக்கும் சென்றுள்ளனர். சிலர் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# 300 பவுன் நகைகள் வவுனியாவில் திருட்டு

வவுனியா குருமன்காடு பகுதியில் நேற்று முன்தினமிரவு 50 லட்சம் பெறுமதியான 300 பவுண் தங்க நகைகள் ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இவற்றுடன் 10 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பணம் என்பனவும் திருடப்பட்டுள்ளது.இரவு 12 மணிக்கும் அதிகாலை3 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் முகமூடி அணிந்த 15 பேர் அடங்கிய குழுவினரால் இக் கொள்ளைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீடுகளைப் பலவந்தமாக உடைத்த திருடர்கள் இக் கொள்ளையை மேற்கொண்டுள்ளதாக வவுனியாப் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வீடுகளில் இருந்தவர்களைத் தாக்கிய கொள்ளையர்கள் மின்சாரத்தை நிறுத்தி, தொலைபேசி இணைப்புக்களை அறுத்தெறிந்த பின் இச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக 13 குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர். (ச)

# நித்திரையில் இருந்த இளைஞன் வெள்ளை வானில் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நித்திரையில் இருந்த இளைஞன் வெள்ளைவானில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சங்கானை பட்டினசபையில் வசித்துவரும், ரட்ணகோபால் வேக் சொப்பில் பணி புரியும் மோட்டார் சைக்கிள் திருத்துநர் சிவலிங்கம் சந்திரகுமார் (வயது-23) என்பவரே கடத்தப்பட்டவர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனின் வீட்டிற்கு வெள்ளை வானில் சென்ற குழு ஒன்று நித்திரையில் இருந்த அவரைத் தூக்கிச் சென்றதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர் கடந்த மாதம்தான் டுபாய் செல்வதற்காக கொழும்பில் தங்கியிருந்து விட்டு ஆலயம் ஒன்றுக்குச் செல்வதற்காக வீடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த7 ஆம் திகதி சுழிபுரத்திலும் தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளதாகவும் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த ரட்ணம் கருணதாசன் (வயது-25) என்ற இளைஞரே கடத்தப்பட்டவராவார்.(ச-5)

# கொழும்பு சென்ற ஆசிரியர்கள் பணம் இல்லாமல் பரிதவிப்பு!

யாழ்ப்பாணத்திலிருந்து கடமை மற்றும் சொந்த அலுவல்கள் காரணமாக கொழும்பு சென்ற பல அரச உத்தியோகஸ்தர்கள் பலர் திரும்பிச் செல்ல முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமதுசொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத முப்பது ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் இவர்களுக்குக் கொழும்பு மற்றும் பிலியந்தலை கல்வி நிலையங்களிலுள்ள பாடசாலைகளில் கையொப்பம் இட நடவடிக்கை எடுத்துள்ளது.இதேவேளை குறிப்பிட்ட ஆசிரியர்கள் கொழும்பில் தங்கியிருப்பதால் அதிக செலவு ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளதுடன் தமக்கு சம்பள முற்பணத்தை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

இது இவ்வாறிருக்ககொழும்பிலிருந்துயாழ்ப்பாணத்திற்கு வந்த அறுபது ஆசிரியர்கள் இங்கு சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(ச)

# மன்னார் ஒருங்கிணைப்பு கூட்டம் நேற்று நடந்தது

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மீள் குடியேற்றஅமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் விஜயவிக்கிரம ஆகியோர் இணைத்தலைமையில் நேற்றுப் பகல் 9.30 மணியளவில் இக் கூட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் கல்வி,சுகாதாரம், போக்குவரத்து மற்றும் விவசாயம் என்பன குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. (ச-5)

# சிற்றுண்டிகளின் விலை திடீரென அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிற்றுண்டிகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தற்போது அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி இவ்விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட உணவகங்களிலேயே இவ்வாறான விலை அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சில உணவகங்கள் பொருட் தட்டுப்பாட்டினால் மூடப்பட்டுள்ளன. ரொட்டி-5 ரூபா, பால் தேநீர்-15ரூபா, தேநீர்-10ரூபா , வடை -15 ரூபா , இடியப்பம்-3ரூபா 50 சதம், வாய்ப்பன்-15ரூபா என விற்பனை செய்யப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க சோறு,பிட்டு என்பன பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விடுதிகளில் தங்கியிருப்பவர்கள் உணவின்றி தவிப்பதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நூலகம்
யாழ்ப்பாணம்



கடமை உணர்வில் எவ்வளவுக்கு எவ்வளவு கெட்டவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக்குத் துன்பங்களை மனிதர்கள் அனுபவிக்கிறார்கள்.

*-பிளேட்டோ*

வலம்புரி

## நேர்மையுடன் செய்ய வேண்டிய உணவுப் பொருட் பங்கீடு

'றுகுணு' கப்பலில் மூவாயிரத்து எண்ணூறு மெற்றிக்தொன் உணவுப் பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. இப்பொருட்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதை யாழ். அரச அதிபர் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

வழமையாகப் பொதுமக்களுக்கு எடுத்து வரும் உணவுப் பொருட்களில் படையினரும் பங்கு போடுவது வழக்கம். கடந்த கால அனுபவங்களிலிருந்து இந்த உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். மூவாயிரத்து எண்ணூறு மெற்றிக்தொன் உணவுப்பொருட்களும் யாழ். குடாநாட்டு மக்களுக்குச் சென்றடைவதைப் படைத் தளபதிகளும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு மிகவும் வேதனைக்குரியது. எனவே றுகுணு கப்பலில் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருட்களிலும் பங்கு போட்டால் பட்டினிச் சாவிலிருந்து மக்களைப் பாதுகாக்க முடியாது என்பது உணர்தற்குரியது.

இது ஒருபுறம்; மறுபுறத்தில் உணவுத் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு ஏற்றவாறு உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பது யாழ்.செயலகத்தினதும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும் தலையாய கடமையாகும்.

அதேநேரம் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருட்கள் சரியான முறையில் பங்கீடு செய்யப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

குறிப்பாக இது விடயத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மிகவும் அவசியமாகும்.

குடும்ப அட்டைகளின் அடிப்படையில் பங்கீடு செய்யப்படும் உணவுப் பொருட்கள் உரியவர்களைச் சென்றடைகின்றதா என்பதை உறுதி செய்வது பல நோக்குக் க்கூட்டுறவுச் சங்கங்களின் கடமையாகும்.

பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு தேவையான பணம் இல்லாத காரணத்தால் ஏழைகளின் பொருட்களை மறைப்புச் செய்த நிகழ்வுகள் சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நடந்துள்ளமை தெரிந்த விடயமே.

எனவே உரியவர்களுக்குரிய பங்கு அவர்களுக்கே கிடைப்பது நேர்மையுடன் உறுதி செய்யும் பணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்களின் முன்னால் காத்திருக்கின்றது.

அத்துடன் கிளை முகாமையாளர் நேரம் பாராது தமது கடமைகளைச் செய்வது உயிர் காக்கும் பணிக்கு உதவுவதாக இருக்கும்.

யாழ். குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு முன்னால் மக்கள் வரிசையில் நிற்பதையும் கடமை நேரம் கடந்து பிந்தி வரும் சங்கப் பணியாளர்களையும் பார்க்கும் போது கூட்டுறவுக் கொள்கை தோற்றுப் போய்விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

எதுவாயினும் ஒவ்வொருவரும் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளும் காலம் இது என்பது உணரப்பட வேண்டியதாகும்.

# எவரையும் கொல்வதற்கு யாருக்கும் உரிமையில்லை

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் வசமுள்ள பகுதிகளை இன்னும் இன்னும் கைப்பற்றுவோமே தவிர இராணுவத்தினரால் மீட்கப்பட்ட இடங்களிலிருந்து ஒரு அங்குலத்தைக் கூட விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஹொரண பிரதேச அமைப்பாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் பயங்கரவாதம் இருக்கலாம். ஆனால் இலங்கையில் இருக்கக் கூடாது என்பதே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையாகும்.

அதனை எமது கட்சி ஆட்சியிலிருக்கும் ஐந்து வருட காலத்திற்குள் நிறைவேற்றிக் காட்டுவோம். பிரச்சினையின்றி போக்குவரத்துக்கு வழிசமைப்போம். கடலிலும் எமக்குப் பிரச்சினையிருக்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். அதற்காகப் புலிகளின் வசம் உள்ள பகுதிகளை இன்னும் கைப்பற்றுவோம்.

எங்களைப் பலிஎடுக்க எவருக்கும் உரிமையில்லை. அதேபோல் எவரையும் கொல்வதற்கு எங்களுக்கும் உரிமையில்லை. எங்களைச் சார்ந்தவர்களைப் பலி எடுத்தமைக்காகவே சம்பூரைக் கைபற்றி தண்டனை வழங்கியுள்ளோம்.

இந்தத் தண்டனையும் இடங்களை மீட்பதற்கான நடவடிக்கையும் தொடரும். இராணுவத்தினரால் மீட்கப்பட்ட இடங்களை திருப்பிக் கொடுத்தால் தான் சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப் படும் என்று புலிகள் யோசனைகளை சமர்ப்பித்துள்ளனர். பிடித்ததை விட்டுக் கொடுக்கும் பழக்கம் எம்மிடம் இல்லை.



புலிகள்மீது கைவைத்தால் கொழும்பு சுக்கு நூறாகும் என்றும் எம்மை அச்சுறுத்தினர். நம்மில் பலரும் பயமுறுத்தினார்கள். ஆனால் திட்டமிட்டபடி சம்பூரைக் கைப்பற்றினோம்.

பேச்சுவார்த்தைக்குப் போய் புலிகள் கேட்பதெல்லாம் கொடுக்க முடியாது. அதனைச் சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். பயங்கரவாதிகள் எந்தக் காட்டில் மறைந்திருந்தாலும் அந்த இடத்தைக் கண்டு பிடித்துத் தாக்கியழிக்கும் இயந்திரங்கள் இருக்கின்றன. துரதிஷ்டவசமாக எம்மால் அவ் இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய முடியவில்லை.

எனினும் சில நாடுகள் எமக்கு கடனுக்கு ஆயுதங்களை விற்பனை செய்துள்ளன. இன்னும் சில நாடுகள் எமக்கு ஆயுதங்களைத் தந்து உதவ முன்வந்துள்ளன. நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தைச் சமர்ப்பித்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சத்தம் குறைவாகவே காணப்பட்டது. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிகள் கூறுவதையே செய்கின்றனர் என பிரதமர் மேலும் கூறியுள்ளார். (ச-5)

# நாட்டைப் பிரிக்காத அதிகாரப் பகிர்வு என்பதே ஐ.தே.கவின் நிலைப்பாடு

## எஸ்.பி.திஸநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

உலகில் யுத்தம் நடைபெற்ற அனைத்து நாடுகளிலும் அதிகாரப் பகிர்வு மூலமே தீர்வு காணப்பட்டுள்ளது. அதனையே உதவி வழங்கும் நாடுகளும் இந்தியாவும் கோருகின்றன.

நாட்டைப் பிரிக்காத அதிகாரப் பகிர்வே எமது நிலைப்பாடாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அறுபது வருட நினைவை முன்னிட்டு நீர்கொழும்பு, கட்டான, திபுலபிட்டி தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய ரிபிலி கஸ்கட்டுவெளவில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே எஸ்.பி.திஸநாயக்க மேற்கண்டவாறுகூறினார்.

விஜயபால மென்டிஸ் தலைமையில்நடைபெற்ற இக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

1905 ஆம் ஆண்டியிலிருந்து வடக்கு மக்கள் அதிகாரங்களைக் கேட்க ஆரம்பித்தார்கள். அவர்கள் தனியான மொழி, கலை , கலாசாரங்களை உடையவர்கள். 1926இல் டொனமூர் முறையைப் பற்றி பண்டாரநாயக்க சொன்னார்.

1956 இல் சிங்கள அரச மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது தமிழ் பேசும் மக்களுக்கு பிரச்சினை ஏற்பட்டது. சிங்கள மொழி அரச மொழிச் சட்டத்தை சிறிமாவோ பண்டாரநாயக்க அமுல்படுத்தினார். இதற்கும் எதிர்ப்புக் கிளம்பியது.

தமிழர்கள் வட்டுக்கோட்டை மாநாட்டை நடத்தி தனிநாட்டுப் பிரேரணையை முன்வைத்தனர். 1977 இல் தனிநாடு கேட்டு தேர்தலில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியைப் பெற்று எதிர்க் கட்சித் தலைமையைப் பெற்றது.

இங்கு அரசியல் இலாபத்துக்காக இனவாதம் பேசப்படுகிறது. சிங்களவர்கள் மாத்திரமன்றி தமிழர்கள் இனவாதத்தைப் பேச ஆரம்பித்துள்ளார்கள். முஸ்லிம்களும் அண்மைக்காலத்திலிருந்து இனவாதத்தைப் பேசத் தொடங்கியுள்ளனர்.

ஐக்கிய இலங்கையில் நாட்டைப் பிரிக்காத அதிகாரப் பகிர்வுக்கு சகல கட்சிகளும் இணங்கின. மகிந்த ஜனாதிபதி அபேட்சகராகியதும் ஜே.வி.பி., ஹெலஉறுமயவுடன் சேர்ந்து ஒற்றையாட்சிக்கான ஒப்பந்தம் செய்தன. அதன் சாபமே இன்று ஏற்பட்டுள்ளது.

தனிநாடு கொடுக்க வேண்டாம். அதிகாரத்தைப் பகிர்ந்தளியுங்கள் என்று இந்தியாகூறி வருகிறது.

தமிழர்களில் ஆறு பிரிவுகள் உருவாகின. விடுதலைப் புலிகள், ஈ.பி.டி.பி:, ஈறோஸ் , ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். இவைதனிநாடு கேட்கத் தொடங்கின. அப்போது மாகாணசபை முறை கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்று வட-கிழக்கில் மாகாண சபை இல்லை.

மகிந்த யுத்தத்தால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று யுத்தம் செய்ய ஆசைப்படுகிறார். யுத்தமே தேவை என்று ஹெல உறுமய சொல்கிறது. ஆட்களைக் கொலை செய் என மதகுருமார்கள் சிலர் கூறுகின்றனர். ஜே.வி.பியும் இதனையே சொல்கிறது.

ஜே.வி.பி. அன்று பயன்படுத்திய ஆயுதங்கள்எதையும் இதுவரை ஒப்படைக்கவில்லை. அதனை ஒப்படைக்காமலேயே பாராளுமன்றம் வந்தார்கள்.அவர்கள் ஆயுதம் தூக்கும் போது அது சாதாரணம்.

ஆனால் தமிழர்கள் ஆயுதம் தூக்கும்போது பயங்கரவாதம் எனக் கூறுகின்றனர். நம் நாட்டைப்பிரிக்காத தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவோம். ஜனாதிபதியின் ஒரு காலை ஜே.வி.பி. இழுக்கும்போது மறுகாலை ஹெல உறுமய இழுக்கின்றது. சந்திரிகாவும் லண்டனிலிருந்துகொண்டு கொக்கையும் போடுகின்றார்.

220 இனங்களைக் கொண்ட இந்தியா யுத்தம் இல்லாமல் பாதுகாக்கப்படுவது அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமையினாலேயேயாகும். யுத்தநிறுத்தம் மூலம் நாட்டைப்பிரிக்காமல் அதிகாரப் பகிர்வுக்குப் பேச்சுநடத்தப்பட்டது. உதவி வழங்கும் நாடுகள் உதவ முன்வந்தன. பொருளாதார அபிவிருத்தி உயர்ச்சியடைந்தது. இன்று பொருளாதார அபிவிருத்தி வீழ்ச்சியடைந்து செல்கிறது.

எப்போதும் ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிகாலத்திலேயே பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. அது புள்ளிவிபரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (ச)

# பல்கலைக்கழக மாணவர் குறித்து ஜனாதிபதி மகிந்தவுக்குக் கடிதம்

(கிளிநொச்சி)

பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் மீது மேற்கொள்ளும் அச்சுறுத்தல்களை உடனடியாக நிறுத்துங்கள். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த வேறு மாவட்ட மாணவர்களிடம் தமது செலவுக்கான பணம் இல்லாமலும் தமது பெற்றோரிடம் தொடர்பின்றியும் நம்பிக்கையிழந்த நிலையில் இருக்கின்றனர்.

எனவே அவர்களைப் பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு எம்.பிக்கள் வை.கோவுடன் சந்திப்பு

(சென்னை)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வை.கோபாலசாமியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தமது இந்திய விஜயத்தின் போது தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகிய இருவரையும் சந்தித்துப் பேசவுள்ளதாக சிவாஜிலிங்கம் எம்.பி.தெரிவித்துள்ளார்.

தம்முடனான சந்திப்பில் நீண்ட கலந்துரையாடல் நடத்தவேண்டுமென்ற எண்ணத்தில் இந்தியப் பிரதமர் தனது வெளிநாட்டு விஜயங்களை முடித்துக்கொண்டு தம்முடன் சந்திக்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.இதேவேளை முதலமைச்சர் கருணாநிதி தம்மை சந்தித்துப் பேசுவார் எனவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ச)

# பயங்கரவாதத்தை முடிபுகட்டுவதற்கு அனைத்துக் கட்சிகளும் இணைய வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



பயங்கரவாதத்தை முடிபுகட்டி இந் நாட்டில் வாழுகின்ற சகல இன மக்களும் சமாதானத்துடன் வாழ்வதற்கு வழிசமைப்பதற்காக அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு சகல கட்சிகளும் தங்களுடைய அரசியல் இலாபங்களை கருத்திற் கொள்ளாது ஒன்றிணைந்து செயற்படவேண்டிய காலம் கனிந்துள்ளது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை காரநிவ் வீதியை அபிவிருத்தி செய்வதற்கான வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் , இவ்வாறான பயங்கரவாத செயற்பாடுகள் நாட்டில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதை எமது அரசாங்கம் மறந்து விடவில்லை. அதன் பயனாகவே வீதி அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கு எதிராக மக்கள் குரல்கொடுக்காது அதனைச் சமாளித்துக் கொண்டிருப்பதை நான் அறிவேன்.இச் செலவுகளில் இருந்து மக்களை மீட்பதற்கு பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வெவ்வேறான விவாதங்கள் முன்வைக்கப்பட்டாலும் செய்ய முடிந்ததையே செய்கின்றோம். நாம் கூறியது போல் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும் நிரந்தர அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கவும் சகல இன மக்களும் அச்சம் பயம்இன்றி வாழ்வதற்குத் தேவையான கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது நோக்கமாகும்.

அத்தோடு மகிந்த சிந்தனையில் குறிப்பிட்டது போல சகல அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். (ச)

# போர் என்பதைத் தவிர வேறு எந்த முடிபும் இல்லை

## தமிழேந்தி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழனம் தனது இருப்பை உறுதிப்படுத்த போர் என்பதைத் தவிர வேறு எந்த முடிவும் அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்று தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு உடையார்கட்டு மகாவித்தியாலயத்துக்கு லெப்.செல்லக்கிளி நினைவாக கட்டப்பட்ட வகுப்பறைக் கட்டட கையளிப்பு நிகழ்வில் சிறப்புரையாற்றுகையில் செ.வ.தமிழேந்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சிறப்புரையில் மேலும் தெரிவித்ததாவது, எமது இளம் தலைமுறை சிறந்த அறிவு பெற்ற சமூகமாக வளர வேண்டும் என்பதற்காக தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் திட்டங்களை செயற்படுத்தும் வகையில் கல்விக்கு பெரும் பங்களிப்பு செய்யப்படுகின்றது.

கட்டடங்கள் கட்டி வழங்கப்படுதல் , சிறப்புப் பாடங்களுக்கான ஆசிரியர்களை நியமித்தல் என்பவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்தப் பணி எமது குழந்தைகளின் நல்வாழ்விற்கான, எமது இனத்தின் மேம்பாட்டுக்கான முதலீடு. போர் எங்களுக்கு வாழ்வு ரீதியான பின்னடைவுகளை தந்திருக்கிறது.

இந்தப் பின்னடைவுகளுக்கு மத்தியிலும் நாங்கள் எங்கள் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்த எம்மாலான பணியை செய்கின்றோம். ஆசிரியர்களும் பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும்.

இப்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்டுள்ள நிலையில் தமிழினம் தனது இருப்பை உறுதி செய்வதற்கு , காப்பாற்றிக் கொள்வதற்கு போராடுவதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் 50 ஆவது பிறந்த நாள் பரிசாக பாடசாலைகளுக்கு வகுப்பறைக்கட்டடங்களை கட்டி வழங்கும் திட்டத்துக்கு அமைய உடையார்கட்டு மகாவித்தியாலயத்துக்கு 87 இலட்சம் ரூபா செலவில் வகுப்பறைக்கட்டடம் தமிழீழ நிதித்துறையால் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை முதல்வர் தலைமையில் நேற்று கையளிப்பு நிகழ்வு நடைபெற்றது. உடையார்கட்டு மகாவித்தியாலய வகுப்பறைக் கட்டட கையளிப்பு நிகழ்வில் பொதுச்சுடரை கட்டுமானப் பொறியியல் நிறுவனப் பணிப்பாளர் ஈசன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார். வகுப்பறைக் கட்டடத்தை ஆவணத்தில் ஃகையெழுத்திட்டு செ.வ.தமிழேந்தி பாடசாலை முதல்வரிடம் கையளித்தார். கட்டடப் பெயர்ப்பலகையை பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரைநீக்கம் செய்து வைத்தார். (ச)

# வந்தாறுமூலையில் 85 பேர் கைது

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறை மற்றும் வந்தாறுமூலை போன்ற பிரதேசங்கள் இராணுவத்தினரால் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தப்பட்டுள்ளதாக உள்ளூர் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

மேற்படி பிரதேசங்களுக்கு திடீரென்று சென்ற படையினர் அப்பகுதியில் தேடுதலை மேற்கொண்டதோடு சந்தேகத்திற்கிடமான 85 பேரை கைதுசெய்து விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்தனர். (ச)

# மிருசுவில் மக்கள் நேற்று இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் நேற்று இடம் பெற்ற மோதல் சம்பவத்தினையடுத்து மிருசுவில், உசன் மற்றும் கொடிகாமம் பகுதியில் இருந்த மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

நேற்று அதிகாலை முதல் இடம் பெற்ற மோதலினையடுத்து பரஸ்பரம் இரு தரப்பினரிடையேயும் ஆட்லறி மற்றும் பல்குழல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிலையில் அங்கிருந்த மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## தீவக மக்களுக்கு...

முகாமையாளர்களும் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தீவகத்தில் இயங்கி வருகின்ற வேலணை , ஊர்காவற்றுறை , புங்குடுதீவு நயினாதீவு மற்றும் நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கங்களில் உலர் உணவுப் பொருட்கள் முற்றாகவே முடிவடையும் நிலையில் இருப்பதாக அச் சங்களின் முகாமையாளர்கள் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

குறிப்பாக குழந்தைகளுக்கான பால்மா மற்றும் உணவு வகைகள் , பிஸ்கட் வகைகள் , மரக்கறி இதர உலர் உணவு வகைகள் முற்றாக முடிவடைந்துள்ளதால் குழந்தைகளை வைத்திருக்கும் பெற்றோர் இவ்வுணவுப் பொருட்களை தேடியலைகின்றனர்.

மண்ணெண்ணெயும் இல்லாத காரணத்தினால் மரக்கறிப் பயிர் செய்கையும் மீன்பிடித்துறையும் முற்றாகவே செயலிழந்துள்ளன. கொடிய வரட்சி நிலவி வருவதால் குடிநீருக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரச நிறுவனங்களான உள்ளூராட்சி சபைகள் முழுமையாக இயங்காத காரணத்தினால் பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

## வாதரவத்தை...

மல்லாகம் நீதிவான் சரோஜினி இளங்கோவன் மரண விசார ணைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத் தியசாலையில் ஒப்படைக்குமாறு அச்சுவேலி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

குறித்த இளைஞன் நீல சாம்பல் நிற முழுக்காற் சட்டை அணிந்திருந்ததாகவும் அடையாளம் காண்பதற்காக பிரேத அறையில்,சடலம் வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். போதனாவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச–5)

## கொழும்புவாசி...

ஆலயம் ஒன்றிற்கு கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யாழ்.வந்த இவர் திரும்பிச் செல்வதற்காக யாழ்.சிவில் அலுவலகத் திற்கு சென்று கப்பலிற்கு பதிவு செய்து விட்டு திரும்பிச் செல்கையிலேயே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை மரண விசாரணைக்காக யாழ்.போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச–5)

## கொழும்புத்...

சென்ற இரட்ணமூர்த்தி, வின்ஸஸ் டயஸ் ஆகிய இருவரும் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச–5)

## அச்சுவேலியில் மீட்கப்பட்ட...

இவரை காணவில்லை என யாழ்.மனித உரிமை குழுவில் 6 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் நேற்று முன்தினம் செல்வநாயகபுரம் பற்றைக்குள் காகங்கள் பறக்கக் காணப்பட்டதாலும் துர்நாற்றம் வீசியதாலும் பொதுமக்கள் சிலர் உள்ளே சென்று பார்த்த போது குறித்த இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது.

சடலத்தின் தலையில் சூட்டுக்காயங்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு நேற்று மரண விசாரணைக்காக மல்லாகம் நீதிவான் சறோஜினி இளங்கோவன்,

யாழ் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி பாலசுப்பிரமணியம் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று பிரேதபரிசோதனை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.சடலம் பிராணிகளால் சேதமாக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## முகமாலை முன்னரங்கப் ...

முகமாலை முன்னரங்கப் பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் ஆட்லறி மற்றும் பீரங்கித்தளங்களைத் தாக்கியழிக்கும் நோக்குடன் நேற்று அதிகாலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது.

இத் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட 11 இராணுவத்தினர் பலியானதுடன் 53 பேர் படுகாயமடைந்துள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.இத் தாக்குதலில் விடுதலைப்புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஆட்லறி மற்றும் விமானத் தாக்குதலின் உதவியுடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைநோக்கி இராணுவத்தினர் வலிந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும் அதனை எதிர்த்து மேற்கொண்ட தாக்குதலில் 20 இராணுவத்தினர் பலியானதுடன் 100 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமது தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை இரு தரப்பினரிடையேயும் நேற்றிரவு மோதல்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல் எதுவும் தெரியவரவில்லை. இதனிடையே இரு தரப்பினர்களுக்கிடையேயும் இரவிரவாக பரஸ்பரம் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது. (ச)

யாழ்.மாவட்ட
வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
வெதுப்பகம் உரிய சகல அங்கத்தவர்களுக்கும்

தற்போதைய நடைமுறைப்படி தங்கள் தங்கள் பிரதேச செயலரினால் சிபாரிசு செய்யப்படும் வெதுப்பகங்களுக்கே மா வழங்கப்படுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் சகல உரிமையாளர்களும் பிரதேச செயலரூடாக நாள் ஒன்றிற்கு வேலை செய்யும் மாவின் (50 கிலோ கிராம்) அளவை உறுதிப்படுத்தித்தரும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இல.64, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(500)
நிர்வாகம்
யா.மா.வெ.உ.கூ.ச (வ-து)

இப்பத்திரிகை வலம்புரி-அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org